அலங்காநல்லூர் அருகே

பைக்கில் நின்று கொண்டிருந்த இளைஞர்களுக்கு அரிவாள் வெட்டு

மர்ம கும்பல் வெறிச்செயல்

அலங்காநல்லூர், பிப்.19–

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே பெரியஇலந்தைகுளத்தை சேர்ந்தவர்கள் முனிஸ்வரன் (25), கிருபாகரன் (19). இருவரும்பக்கத்துஊரான குட்டிமேய்க்கிபட்டி ஊர் மந்தையில் இருசக்கர வாகனத்தில் நேற்று மாலை நின்று கொண்டிருக்கும் பொழுது கார் மற்றும் இருசக்கர வாகனத்தில் முகமூடி அணிந்து வந்த மர்ம கும்பல் ஒன்று அங்கு நின்று கொண்டிருந்த முனிஸ்வரனிடம் ஒரு குறிப்பிட்ட பெயரை சொல்லி விலாசம் விபரம் கேட்டுள்ளனர். அதற்கு முனிஸ்வரன் எனக்கு தெரியாது என கூறியுள்ளார். உடனே முகமூடி கும்பல் அவரை பட்டா கத்தியால் வெட்டியுள்ளனர். தடுக்கப் போன கிருபாகரனுக்கும்வெட்டு விழுந்தது.தகவலறிந்து வந்த போலீசார் 2 பேரையும் மீட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.ஆபத்தான நிலையில் 2 பேரும் சிகிச்சை பெறுகிறார். மேலும் அலங்காநல்லூர் போலீசார் வழக்கு பதிவு செய்து காரில் வந்த முகமூடி கும்பல் யார்? எதற்காக 2 பேரையும் வெட்டினார்கள்? என்ன காரணம் என்று விசாரித்து வருகின்றனர். மேலும் அந்த பகுதியில் உள்ள சி.சி டி.வி. கேமராக்களையும் போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மானாமதுரை அருகே கல்லூரி மாணவன் தாக்கப்பட்ட சம்பவம்:

தேசிய ஆணைய இயக்குனர் விசாரணை

சிவகங்கை, பிப்.19–

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள மேலபிடாவூர் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த செல்லம்மாள் என்பவரின் மகன் அய்யாசாமி (19) தாக்கப்பட்ட சம்பவம் குறித்து தேசிய ஆதிதிராவிட ஆணையை இயக்குனர் ரவிவர்மன் விசாரணை மேற்கொண்டார். இம்மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள மேலப்பிடாவூர் கிராமத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவனான அய்யாசாமியை இதே ஊரைச் சேர்ந்த வினோத்குமார், ஆதீஸ்வரன், வல்லரசு ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து கைகளில் வெட்டியுள்ளனர். இந்த இளைஞர் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் இந்த சம்பவம் தொடர்பாகவன்கொடுமை சட்டத்தில் மூன்று நபர்களையும் கைது செய்துள்ளனர் இச்சம்பவம் குறித்து

தேசிய ஆதிதிராவிட ஆணையத்தின் இயக்குனர் ரவிவர்மன், சீனியர் விசாரணை அதிகாரி லிஸ்டர் அடங்கிய குழுவினர் மேலபிடாவூர் கிராமத்தி ற்கு சென்று பாதிக்கப்பட்டவரின் கருத்தினை கேட்டறிந்தனர் பின்னர் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஸ் ராவத் மற்றும் பல அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டனர். அப்போது பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தி ற்கு மாவட்ட நிர்வாக த்தினர் சார்பில் தீர்வு உதவித் தொகையாக 62 ஆயிரத்து 500 ரூபாயை வழங்கினார். மேலும் அப்பகுதிகளில் உள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கும் பட்டா வழங்கவும், பாதுகாப்பு வழங்கவும் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜிதுக்கு தேசிய ஆதிதிராவிட ஆணையத்தின் இயக்குனர் ரவிவர்மன் பரிந்துரை செய்துள்ளார்.

தமிழ்நாடு

பசுமை முதன்மையாளர் விருதுக்கு ஏப்ரல் 15 வரை விண்ணப்பிக்கலாம்

சென்னை ஆட்சியர் அறிவிப்பு

சென்னை, பிப்.19–

தமிழ்நாடு பசுமை முதன்மையாளர் விருது 2024க்கு வரும் ஏப். 15–ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்என்றுசென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:–

தமிழக அரசு சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முன் மாதிரியான பங்களிப்பை வழங்கும் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு 'பசுமை முதன்மையாளர் விருது' வழங்கப்படும் என 2021இல் அறிவிக்கப்பட்டது.

அதன்படி 2021–22ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் மொத்தம் 100 தனி நபர்கள், நிறுவனங்கள் மற்றும் சங்கங்களை தேர்ந்தெடுத்து அவா்களுக்கு தலா ரூ. 1 லட்சம் பரிசுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2024–25ஆம் ஆண்டுக்கான பசுமை முதன்மையாளர் விருதுகளுக்கு விண்ணப்பிக்க தகுதியானர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, அதே இணையதளத்தில் வரும் ஏப். 15–ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் தகவல்களுக்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சென்னை மாவட்ட அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும் எனத் தெரிவித்துள்ளார்.

சென்னை தி நகரில்

ஜவுளிக்கடையில் ரூ.9 லட்சம் திருட்டு

பால்ஸ் சீலிங்கை உடைத்து துணிகரம்

சென்னை:பிப்.19–

குமரன் சில்க்ஸ் ஜவுளிக்கடையில் ரூ.9 லட்சம் திருடப்பட்டது குறித்து மாம்பலம் போலீஸார் தனிப்படைஅமைத்துவிசாரித்து வருகின்றனர்.

தி.நகர், நாகேஸ்வரா சாலையில் பிரபலமான குமரன் சில்க்ஸ் ஜவுளிக் கடை இயங்கி வருகிறது. நேற்று முன்தினம் இரவு வழக்கம்போல் வியாபாரம் முடிந்து ஜவுளிக்கடை மூடப்பட்டது. நேற்று காலை 10 மணிக்கு கடை மீண்டும் திறக்கப்பட்டது. அப்போது, 4வது மாடியில் இருந்த பால்ஸ் சீலிங் உடைக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

தொடர்ந்து அங்கிருந்த கல்லாப்பெட்டியைபார்த்தபோது அது உடைக்கப்பட்டு அதிலிருந்த ரூ.9 லட்சம் திருடப்பட்டிருந்தது தெரிந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த ஊழியர்கள் இது தொடர்பாக மேல் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து, மதியம் 12 மணியளவில் காசாளர் அஜித் (47) திருட்டு தொடர்பாக மாம்பலம் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார். அதன்படி, அக்காவல் நிலைய குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டனர்.

பணத்தை திருடிவிட்டு தப்பியவர்களை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டது. தனிப்படை போலீஸார் சம்பவ இடம் மற்றும் அதைச் சுற்றி பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராகாட்சிகளைக் கைப்பற்றி அதன் அடிப்படையில் ஆய்வு செய்து வருகின்றனர். சென்னையின் முக்கிய பகுதியில் பிரபல ஜவுளிக்கடையில் பணம்திருடப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னையில்

மாணவர்கள், இளைஞர்களிடம் கஞ்சா சாக்லெட் விற்பனை

ஒடிசா இளைஞர் கைது

சென்னை,பிப்.19–

சென்னையில்போதைப் பொருள் கடத்தல், பதுக்கல், விற்பனையைத் தடுக்க காவல் ஆணையர் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதன் ஒரு பகுதியாக கண்காணிப்பு பணி முடுக்கிவி டப்பட்டுள்ளது. அதன்படி, பெரியமேடு போலீஸார் நேற்று முன்தினம் சென்ட்ரல் ரயில் நிலையம், இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் அருகே கண்காணித்தனர்.

அப்போது, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த நபரிடம் விசாரணை மேற்கொண்டனர். அந்த நபர் முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்ததால், அவர்வைத்திருந்தபையை சோதனை செய்தபோது, அதில் 30 கஞ்சா சாக்லெட்டுகள் மற்றும் கஞ்சா மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது. இதையடுத்து, நடத்தப்பட்ட தொடர் விசாரணையில் பிடிப ட்டவர் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த கார்த்திக் பிரசாத் மாலிக் (20) என்பது தெரிந்தது. அவரை கைது செய்த போலீஸார், கஞ்சா சாக்லெட்டுகள் மற்றும் கஞ்சா பொட்டலங்களை பறிமுதல் செய்தனர்.அவர் ஒடிசா மாநிலத்திலிருந்து கஞ்சா சாக்லெட்டுகளை ரயிலில் கடத்தி வந்து இளைஞர்கள்மற்றும்மாணவர்களை குறிவைத்து அதிக விலைக்கு விற்பனை செய்து வந்தது தெரியவந்தது. இதையடுத்து கார்த்திக் பிரசாத் மாலிக்கை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி போலீசார் சிறையில் அடைத்தனர்.

திருமலையில்

மார்ச் 9 முதல் 13 வரை தெப்பத்திருவிழா

திருமலை,பிப்.19–

திருமலையில் மார்ச் 9 முதல் 13 வரை தெப்பத் திருவிழா நடைபெறவுள்ளது. 5 நாட்கள் வரை நடைபெற உள்ள இந்த தெப்பத்திருவிழாவில் தினமும் உற்சவ மூர்த்திகள் தெப்பத்தில் உலாவந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்க உள்ளனர்.திருமலையில் தினமும் இரவு 7 மணிக்கு தொடங்கும்

இந்த தெப்பத்திருவிழாவில் முதல் நாளான மார்ச் 9ம் தேதி, சீதா சமேத ஸ்ரீராமர், லட்சுமணர், அனுமன் ஆகியோர் 3 சுற்று உலா வந்து பக்தர்களுக்கு காட்சி தருவர்.

மார்ச் 10ம் தேதி பாமா, ருக்மணி சமேராய் ஸ்ரீ கிருஷ்ணர் 3 சுற்று உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பர். இதனை தொடர்ந்து மார்ச் 11ம் தேதி முதல் 13ம் தேதி வரை தொடர்ந்து 3 நாட்களுக்கு ஸ்ரீதேவி, பூதேவி சமேதராய் உற்சவர் மலையப்பர் 5 முதல் 7 சுற்றுகள் வரை உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளிப்பர்.

இதனையொட்டி, மார்ச் 9ம் தேதி முதல் 13 ம் தேதி வரை திருமலையில் நடைபெறும் சகஸ்ர தீப அலங்கார சேவை மற்றும் ஆர்ஜித பிரம்மோற்சவம் ஆகிய சேவைகளை திருமலை திருப்பதி தேவஸ்தானம் ரத்து செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

தொண்டியில்

பா.ஜ.க. நிர்வாகி காரில் கட்டியிருந்த கொடியை சேதப்படுத்தியவர்கள் மீது வழக்கு

போலீசார் விசாரணை

ராமநாதபுரம், பிப், 19–

ராமநாதபுரம் அருகே உள்ள சூரன்கோட்டை கிராமத்தை சேர்ந்தவர்சந்தானம் மகன் சண்முகநாதன், வக்கீல் தொழில் செய்து வரும் இவர் பாரதிய ஜனதா கட்சியின் பொருளாதார பிரிவு மாநில செயலாளராக பொறுப்பில் இருந்து வருகிறார்.

இந்த நிலையில் கடந்த பிப்ரவரி 1 ந்தேதி மாவட்ட பாஜக தலைவர் முரளிதரன் மற்றும் கட்சி நிர்வாகிகளுடன் தொண்டி பகுதிக்கு சென்ற இவர் இரவு 8.30 மணியளவில் தொண்டி டக்காஸ் அல்வா கடை அருகே இவரது இன்னோவா காரை நிறுத்தியிருந்ததாக கூறப்படுகிறது. அப்போது மர்ம நபர்கள் இவரது காரில் கட்டியிருந்த பாஜக பிளாஸ்டிக் கொடியை உடைத்து சேதப்படுத்தியதாக கூறப்படுகிறது.

இது குறித்து பாஜக நிர்வாகி சண்முகநாதன் தொண்டி போலீசில் புகார் அளித்தார்.

இது குறித்து நேற்று தொண்டி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முருகானந்தம் தலைமையிலான போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் பெண் தீக்குளிக்க முயற்சி

காவலர்கள் தடுத்து நிறுத்தினர்

சிவகங்கை, பிப்.19–

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர்அருகே மாதவராயன்பட்டியைச் சேர்ந்தவர் இந்திராணி இவர் தனது குடும்பப் பிரச்சினையை தீர்த்து வைக்கக் கோரி கலெக்டர் அலுவலகம் முன்பாக தீக்குளிக்க முயன்ற போது காவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

திருப்பத்தூர் அருகே உள்ள மாதவராயன்பட்டியை சேர்ந்தவர் இந்திராணி.

இவர் தனது கணவர் அழகுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பத்தாண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்.

இந்நிலையில் தனது கணவர் சொத்துக்களை அவரது தம்பியின் உறவினர்களுக்கு எழுதி கொடுத்துவிட்டதாகவும் இதனால் கணவரின் சொத்தில் தனக்கு பங்கு வேண்டும் என்று கூறி எஸ்.வி.மங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இது குறித்து விசாரணை செய்த காவல்துறையினர் நீதிமன்றத்தில் வழக்கு தொடந்து சொத்துக்களை பெற்று கொள்ள அறிவுறுத்திய நிலையில் தனது புகாருக்கு உரிய நடவடிக்கையை எஸ்.வி. மங்கலம் காவல் துறையினர் எடுக்கவில்லை என்று கூறி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு திடீரென மறைத்து வைத்திருந்த மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயற்சி செய்தார்.

உடனடியாக அருகில் இருந்த காவல்துறையினர் வேகமாக வந்து தடுத்து நிறுத்தி அப்பெண்ணை ஆட்சியரை சந்திக்க அழைத்துச் சென்றனர்.

இதனால் ஆட்சியர் அலுவலகத்தில் சிறிது நேரம் பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

earc — என்கோர் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிடெட்
EARC-Bank-029-Trust இன் அறங்காவலராக செயல்படுகிறது
கார்ப்பரேட் அலுவலகம்: 5வது தளம், பிளாட் எண். 137, செக்டர்44, குருகிராம்122002, ஹரியானா, இந்தியா
தொலைபேசி: + 91.124.4527200 | தொலைநகல்: +91.124.4527231 மின்னஞ்சல்: contact@encorearc.com
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்: கேடி கமர்ஷியல் டவர், ரெகஸ் வணிக மையம், 5வது தளம், ஏரோசிட்டி (டயல்), புது தில்லி, இந்தியா-110037.

உடைமை அறிவிப்பு

அதேசமயம்,
EARC-BANK-029-Trust இன் அறங்காவலராக செயல்படும் என்கோர் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிடெட் ("Encore ARC"), 16-04-2024 தேதியிட்ட ஒதுக்கீட்டு ஒப்பந்தத்தின்படி 29-09-2023 முதல் அமலுக்கு வரும் வகையில், நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம் 2002 ('SARFAESI சட்டம், 2002') இன் பிரிவு 5 இன் கீழ் வங்கியால் உருவாக்கப்பட்ட T கிங்ஸ்டனின் நிதி சொத்துக்களில், **மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின்** ('வங்கி') அனைத்து உரிமைகள், தலைப்பு மற்றும் நலன்களைப் பெற்றுள்ளது.
மேலும், கீழே கையொப்பமிடப்பட்டவர், SARFAESI சட்டம், 2002 இன் கீழ் Encore ARC இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகவும், SARFAESI சட்டம், 2002 இன் பிரிவு 13(12) இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 ('விதிகள்') இன் விதி 3 உடன் சேர்த்து வாசிக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, 17-06-2021 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டார். **G ஜோதிசஹாயமரி (கடன் வாங்கியவர்), J கிளாட்வின் ரவிக்குமார் (இணை கடன் வாங்கியவர்)** அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **ரூ. 3,15,254/- (ரூபாய் மூன்று லட்சத்து பதினைந்தாயிரத்து இருநூற்று ஐம்பத்து நான்கு மட்டும்)** தொகையை ஒப்பந்த விகிதத்தில் கூடுதல் வட்டி, தற்செயலான செலவுகள் மற்றும் செலவுகளுடன், **16-06-2021** முதல், குறிப்பிட்ட அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும்.
கடன் வாங்கியவர்/உத்தரவாதம் அளிப்பவர்/அடமானதாரர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே கையொப்பமிட்டுள்ள என்கோர் ஏஆர்சியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கடன் வாங்கியவர்/உத்தரவாதம் அளிப்பவர்/அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு, **12.02.2025** அன்று, சர்ஃபேசி சட்டம், 2002 இன் பிரிவு 13 இன் துணைப்பிரிவு (4) மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 8 இன் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கையகப்படுத்தியுள்ளார் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
குறிப்பாக கடன் வாங்கியவர்/உத்தரவாதம் அளிப்பவர்/அடமானதாரர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் சொத்தை கையாள வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள், மேலும் சொத்துடனான எந்தவொரு பரிவர்த்தனையும் **28-01-2025 அன்று ரூ. 3,76,098/- (ரூபாய் மூன்று லட்சத்து எழுபத்தாறாயிரத்து தொண்ணூற்றெட்டு மட்டும்)**, ஒப்பந்த விகிதத்தில் கூடுதல் வட்டி, தற்செயலான செலவுகள் மற்றும் செலவுகள் **29-01-2025** முதல்.
பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக்கொள்ள, கிடைக்கும் காலக்கெடுவைப் பொறுத்தவரை, 2002 ஆம் ஆண்டு SARFAESI சட்டத்தின் பிரிவு 13 இன் துணைப்பிரிவு (8) இன் விதிகளுக்கு கடன் வாங்குபவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அட்டவணை
அசையாச் சொத்தின் விளக்கம்

தூத்துக்குடி மாவட்டம், பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், நாசரேத் துணைப் பதிவாளர் அலுவலகம், 210.1904 சதுர மீட்டர் பரப்பளவில் காலியாக உள்ள இடம். 52 சென்ட்களில் = 0.21.0 H.A. தூத்துக்குடி மாவட்டம், சாந்தங்குளம், ஈழவரைமுக்கி கிராமம், தோப்பூரில், 3வது வார்டில் உள்ள அய்யன் புஞ்சா செ.எண்.64A/8. எல்லை விவரம்: வடக்கு நிலம் மைக்கேல் ஆண்டனி மற்றும் குடும்பத்தினருக்கு சொந்தமானது, கிழக்கு நிலம் அந்தோணிமுத்து நாடருக்கு சொந்தமானது, தெற்கு நிலம் கனகராஜுக்கு சொந்தமானது, மேற்கு வடக்கு தெற்கு பொது பாதை.

தேதி: 18-02-2025
இடம்: தூத்துக்குடி
எஸ்டி / கே. லோகேஷ் குமார் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
என்கோர் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிடெட்

ICICI Home Finance
கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059, இந்தியா
கிளை அலுவலகம்: 2வது தளம், சுவர்ணாம்பிகை பிளாசா, ஓமலூர் பிரதான சாலை, சேலம் 636009

தனியார் ஒப்பந்தம் மூலம் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 இன் கீழ், பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 8(8) r/w விதி 9 (1) உடன் படிக்கப்பட்ட தனியார் ஒப்பந்தம் மூலம் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு
கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்காக ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (ஐசிஐசிஐ எச்எஃப்சி) பல மின்ஏலங்களை நடத்தியது. இருப்பினும், அத்தகைய அனைத்து மின்ஏலங்களும் தோல்வியடைந்தன. இப்போது, ஆர்வமுள்ள வாங்குபவர் ஐசிஐசிஐ எச்எஃப்சியை அணுகி, அந்த சொத்தை ரூ. 30,00,000/- இதன் மூலம் பொதுமக்களுக்கு, குறிப்பாக கடன் வாங்குபவர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு, ஐசி ஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கைப்பற்றப்பட்ட, பாதுகாக்கப்பட்ட கடனாளிக்கு அடமானம் வைக்கப்பட்ட/வசூலிக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி, தனியார் ஒப்பந்தத்தின் மூலம் "எங்கே இருக்கிறதோ அப்படியே", "எது இருக்கிறதோ அப்படியே" மற்றும் "எது இருக்கிறதோ அதுவாக" விற்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது:

வ. எண்	கடன் வாங்குபவர்(கள்)/ இணை கடன் வாங்குபவர்கள்/ உத்தரவாததாரர்கள்/சட்ட வாரிசுகளின் பெயர். கடன் கணக்கு எண்.	தெரிந்த சுமைகளுடன் கூடிய செக்யூர்டாசெட்(கள்) விவரங்கள், ஏதேனும் இருந்தால்	நிலுவையில் உள்ள தொகை	ரிசர்வ் விலை / ஈஎம்டி பண வைப்பு	சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம்	ஏல தேதி மற்றும் நேரம்	ஏல தேதிக்கு ஒரு நாள் முன்பு	சர்ஃபேசி நிலை
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)	(ஏ)	(ஐ)
1.	எம் சுந்தரவேலு (கடன் வாங்கியவர்) மாரிமுத்து எஸ் ஜி. (இணை கடன் வாங்கியவர்)சசிலா எம் (இணை கடன் வாங்கியவர்) கடன் கணக்கு எண். NHSL00000842609	கதவு எண். 2/1211, சர்வே எண். 24/10D1A, 24/10D2A, பட்டா எண். 265 - 267, கன்னத்தேரி கிராமம், சங்ககிரி தாலுகா, சேலம் மாவட்டம்	ரூ. 63,42,711/- பிப்ரவரி 13, 2025	ரூ. 30,00,000/- / ரூ. 3,00,000/-	பிப்ரவரி 28, 2025 காலை 11:00 மணி மதியம் 03:00 மணி	மார்ச் 07, 2025 பிற்பகல் 02:00 மணி 03:00 மணி	மார்ச் 06, 2025 பிற்பகல் 04:00 மணிக்கு முன்	உடல் உடைமை

ஆன்லைன் ஏலம் எங்கள் ஏல நிறுவனமான மேடெக்ஸ் நெட் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளத்தில் (URL இணைப்பு https://assets.matexauctions.com) நடத்தப்படும். வருங்கால ஏலதாரர்(கள்) மார்ச் 06, 2025 அன்று மாலை 04:00 மணிக்கு முன் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், கிளை அலுவலக முகவரியில் ஈவானண்ட் பண வைப்புத்தொகை (EMD) RTGS/டிமாண்ட் டிராஃப்டை (DD) (பத்தி E ஐப் பார்க்கவும்) சமர்ப்பிக்க வேண்டும். வருங்கால ஏலதாரர்(கள்) மார்ச் 06, 2025 அன்று மாலை 05:00 மணிக்கு முன்னதாக கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டை கிளை அலுவலக முகவரியில் பதிவு படிவம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்தின் கையொப்பமிடப்பட்ட நகலை சமர்ப்பிக்க வேண்டும். ஈவானண்ட் பண வைப்புத்தொகை டிமாண்ட் டிராஃப்ட் (DD) கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிளை அலுவலக முகவரியில் செலுத்தக்கூடிய "ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - Auction" என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட/அட்டவணைக்கப்பட்ட வங்கியிடமிருந்து பெறப்பட வேண்டும்.
பொது மக்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆர்வமுள்ள வாங்குபவர் வழங்கும் தொகையை விட அதிகமான தொகையை தங்கள் ஏலங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்கூறிய ஆர்வமுள்ள வாங்குபவர் வழங்கும் தொகையை விட அதிகமான ஏலங்கள் எதுவும் ஐசிஐசிஐ எச்எஃப்சி ஆல் பெறப்படாவிட்டால், அடமானம் வைக்கப்பட்ட சொத்து, பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 8(8) r/w விதி 9 (1) இன் படி, குறிப்பிட்ட ஆர்வமுள்ள வாங்குபவருக்கு விற்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
விற்பனையின் ஆய்வு, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் தொடர்பான கூடுதல் விளக்கங்களுக்கு, தயவுசெய்து 9920807300 என்ற எண்ணில் ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டைத் தொடர்பு கொள்ளவும்.
மேலும் எந்த காரணங்களையும் வழங்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்க அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு உரிமை உண்டு. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவுசெய்து https://www.icicihfc.com/ ஐப் பார்வையிடவும்.

தேதி: பிப்ரவரி 19, 2025
இடம்: சேலம்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, " ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்"
CIN எண் U65922MH1999PLC120106

Protium
புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
நிர்லான் நாலெட்ஜ் பார்க் (என்கேபி) பி2, ஏழாவது மாடி, பஹாடி கிராமம், ஆஃப்.
மேற்கு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை, காமா தொழில்துறை எஸ்டேட், கோரேகான் (A), மும்பை, மகாராஷ்டிரா-400063

பொது அறிவிப்பு

(பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 3 (1) இன் கீழ்) நிதி சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 இன் U/s.13 (2) இன் மாற்று அறிவிப்பு சேவை.

கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன் வாங்குபவர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது, ஏனெனில் அவர்கள் புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட் என்றும் அதற்கு முன்பு குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் என்றும் அழைக்கப்பட்டனர்), அவர்களின் கடன் வசதி ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல்களின்படி NBFC இன் புத்தகங்களில் செயல்படாத சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிறகு, NBFC, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய கடனாளிகளுக்கு நிதிச் சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (SARFAESI சட்டம்) பிரிவு 13(2) இன் கீழ், கூறப்பட்ட கடன் வாங்குபவர்களின் கடைசியாக அறியப்பட்ட முகவரிகளில் கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பியுள்ளது. இதன் மூலம், கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளை, அந்தந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் தற்செயலான செலவுகள், செலவு, கட்டணங்கள் போன்றவற்றின் மீதான ஒப்பந்த விகிதத்தில் கூடுதல் வட்டியுடன் சேர்த்து, அவர்களிடம் கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 (SARFAESI விதிகள்) விதி 3 இன் படி இந்த வெளியீட்டின் மூலம் நாங்கள் சேவையைச் செய்கிறோம்.

கடன் கணக்கு எண். கடன் வாங்குபவர் மற்றும் இணை கடன் வாங்குபவரின் பெயர் மற்றும் முகவரி	கோரிக்கை அறிவிப்பு தேதி	கீழே உள்ள தேதியின்படி மொத்த நிலுவைத் தொகைகள் (INR)*
கடன் கணக்கு எண். GS009MF02274993, (கடன் வாங்கியவர்) a. அதன் கதிர்வேல் கணபதியப்பன் S/O கணபதியப்பன் மூலம் சாந்தியா துணி, (இணை கடன் வாங்கியவர்) b. கதிர்வேல் கணபதியப்பன் S/O கணபதியப்பன் C. லட்சுமி G W/O கணபதியப்பன், d. கதிர்வேல் காஞ்சி நாத்தியா 2. முகவரிகள் எண். 2524 விவேகானந்த நகர் செம்மிபாளையம் குப்புசாமிநாயுடுபுரம் திருப்பூர் தமிழ்நாடு-641662	29 ஜனவரி, 2025 NPA தேதி 08.01.2025	INR 28 ஜனவரி 2025 நிலவரப்படி ரூ. 71,27,888.8/- (ரூபாய் எழுபத்தொரு லட்சத்து இருபத்தேழாயிரத்து எண்ணூற்று எண்பத்தெட்டு பைசா மட்டும்).

பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள்/அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களின் விளக்கம்

சப்ளையர்/OEM பெயர்	சப்ளையர்/OEM பெயர்	எண்ணிக்கை	விலைப்பட்டியல் எண் & தேதி
லெஜண்ட் பிரைட் டெக்ஸ்டைல்ஸ்	லெஜண்ட் பிரைட் அலைபாயும், இயந்திர மாதிரி எண். 1010, அரை ஆட்டோ தறி படிக்க இடம் 1500 மிமீ, இயந்திர வரிசை எண் 00018, 00019 00020, 00021, 00022, 00023, 00024	7	Lb019 தேதியிட்டது 29.06.2024
லெஜண்ட் பிரைட் டெக்ஸ்டைல்ஸ்	லெஜண்ட் பிரைட் அலை அலையான இயந்திரம், மாடல் எண். 1010 செமி ஆட்டோ லூம் ரீட் ஸ்பேஸ் 1500 மிமீ, மெஷின் சீரியல் எண். 00025, 00026, 00027, 00028, 00029	5	Lb020 தேதியிட்ட 29.06.2024
லெஜண்ட் பிரைட் டெக்ஸ்டைல்ஸ்	லெஜண்ட் பிரைடு அலை அலையான இயந்திரம், மாடல் எண். 1010 செமி ஆட்டோ லூம், ரீட் ஸ்பேஸ் 1500 மிமீ, மெஷின், சீரியல் எண். 00030, 00031, 00032	3	Lb021 தேதியிட்ட 12.07.2024

இதில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் வாங்குபவர் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் எங்களுக்கு செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம், மேலும் வழங்கப்பட்ட தொடர்புடைய கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகை, அதற்கான கூடுதல் வட்டி மற்றும் செலவு, கட்டணங்கள், செலவுகள், அவ்வாறு செய்யத் தவறினால், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ், மேற்கூறிய பாதுகாக்கப்பட்ட சொத்து(கள்)/அசையாச் சொத்து(கள்) மீது விற்பனை செய்ய எங்களுக்கு சுதந்திரம் உள்ளது. கடன் வாங்கியவர்(கள்)/சக கடன் வாங்கியவர்(கள்)/சட்ட வாரிசு(கள்)/சட்ட பிரதிநிதி(கள்) ஆகியோரின் ஆபத்தில், உங்கள் சொந்த செலவில் மற்றும் விளைவுகளில், பாதுகாக்கப்பட்ட சொத்தை முழுவதுமாக உடைமையாக்கி விற்பனை செய்வதற்கு மட்டும் அல்ல.
SARAFESI சட்டத்தின் பிரிவு 13(13) இன் படி, வங்கியின் முன் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமல், மேற்கூறிய பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை விற்பனை, குத்தகை அல்லது வேறு வழியில் மாற்றுவதற்கு நீங்கள் அனைவரும் தடைசெய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை நினைவில் கொள்ளவும். மேற்கூறிய பிரிவை நீங்கள் மீறினால், SARFAESI சட்டத்தின் பிரிவு 29 மற்றும்/அல்லது இது தொடர்பாக வேறு ஏதேனும் சட்ட விதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனை விதிகளைப் பயன்படுத்துவீர்கள்.
சட்டத்தின் பிரிவு 13 இன் துணைப்பிரிவு (8) இன் படி, புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது) செலுத்த வேண்டிய அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் சேர்ந்து புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது) விற்பனை அல்லது பரிமாற்றத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் எந்த நேரத்திலும் புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது) நிறுவனத்திற்கு டெண்டர் செய்யப்பட்டால், பாதுகாக்கப்பட்ட சொத்தை புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்) விற்கவோ அல்லது மாற்றவோ கூடாது, மேலும் பாதுகாக்கப்பட்ட சொத்தை மாற்ற அல்லது விற்பனை செய்வதற்கு புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்) எந்த நடவடிக்கையும் எடுக்காது என்பதை நினைவில் கொள்க.

இடம்: திருப்பூர், தமிழ்நாடு, தேதி: 19.02.2025
எஸ்டி/, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்

Bandhan Bank
Regional Office: Netaji Marg, Nr. Mithakhali Six Roads, Ellisbridge, Ahmedabad-6. Phone: +91-79-26421671-75

அடையாள சுவாதீன அறிவிப்பு

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட், 2002 கீழ் மற்றும் செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்ஃபோர்ஸ்மெண்ட்) ரூல்ஸ், 2002-ன் விதி 3ன் கீழ் பிரிவு 13(12)-ன் அதிகார வரம்பைப் பயன்படுத்தி கணக்குக்கு எதிராக குறிப்பிட்டுள்ள தேதியில் கடன்தாரர்களுக்கு டிமாண்ட் நோட்டீஸ் வெளியிட்டு மற்றும் உத்தரவாதிகளுக்கு அதன் நகலை அளித்து பாக்கி தொகையை மேற்படி நோட்டீஸ் பெற்ற 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும்படி கேட்டு இருந்தார். கடன்தாரர் மேற்படி தொகையை திருப்பிச் செலுத்தத் தவறி விட்டார். எனவே கடன்தாரர்களுக்கு மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படும் அறிவிப்பு என்னவெனில் கீழே கையெழுத்திட்டவர் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பின்படி மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் விதி 8படி கீழே விபரம் அளிக்கப்பட்டுள்ள மேற்படி சொத்தை ஒரு அடையாளம் ஆக கையகப்படுத்தி உள்ளார். கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்கள் கீழே விபரம் குறிப்பிட்டுள்ள அந்த சொத்து சம்பந்தமாக எந்த விவகாரங்களிலும் ஈடுபடக் கூடாது மற்றும் அந்த சொத்து சம்பந்தப்பட்ட எந்த விவகாரங்களிலும் ஈடுபடுவோர் பந்தன் பாங்க் லிமிடெட்டுக்கு பாக்கித் தொகை மற்றும் அதற்குரிய வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்களை செலுத்தப் பொறுப்புடையவர்கள் என இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். பிணையமாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்க கிடைக்கும் காலவரம்பு சம்பந்தமாக சட்டத்தின் பிரிவு 13ன் உப-பிரிவு (8)-ன் பகுதிகளை கவனிக்குமாறு கடன்தாரர்களுக்கு /பிணையமாக வைத்தவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்களின் பெயர்கள் மற்றும் கடன் கணக்கு எண்	பிணையமாக வைக்கப்பட்ட சொத்து (செக்யூர்டு அசெட்ஸ்) விபரம்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி	சுவாதீன நோட்டீஸ் தேதி	டிமாண்ட் நோட்டீஸ் தேதி அன்று பாக்கியுள்ள தொகை
ரமேஷ் பாலகிருஷ்ணன் சாந்தி பாலகிருஷ்ணன் பி ஆனந்தம் 20009470000075	வார்டு-பி, பிளாக் எண்.18, பழைய சர்வே எண். 669/2, புதிய டி.எஸ்.நம்பர்.1, புதிய பெத்லேகம் 1ம் தெரு, ஆம்பூர் டவுன், ஆம்பூர் தாலுகா, ஆம்பூர் துணை மாவட்டம், வேலூர் பதிவு மாவட்டம் என்ற முகவரியில் அமைந்துள்ள அனைத்து அசையாச் சொத்து மற்றும் இதன் எல்லைகள்: வடக்கு: நாசர்கானுக்கு சொந்தமான நிலம், கிழக்கு: ஷஹாபரன் தெரு, மேற்கு: நூஉல்லாவால் விற்கப்பட்ட மனை, தெற்கு: ஏ.எம்.இஸ்மாயில் சாய்புவுக்கு சொந்தமான நிலம்	16.11.2024	14.02.2025	ரூ.55,84,490.01
பி ஆனந்தன் சாந்தி பாலகிருஷ்ணன் ரமேஷ் பாலகிருஷ்ணன் 20009470000076	சர்வே நம்பர் 669/2. டோர் நம்பர் 26/5, அசனம்பட்டு ரோடு 1ம் தெரு, புதிய பெத்லேகம் பிளாக் நம்பர் 18, வார்டு-பி, ஆம்பூர் டவுன், ஆம்பூர் தாலுகா, திருப்பட்டூர் மாவட்டம்,வேலூர்,தமிழ்நாடு என்ற முகவரியில் அமைந்துள்ள அனைத்து அசையாச் சொத்து மற்றும் இதன் எல்லைகள்: வடக்கு: பிளாட் எண்.19 வடக்கு பகுதி சம்ஷாத்துக்கு சொந்தமானது, கிழக்கு: 18 அடி தெரு, மேற்கு: அல்தாப் அகமதுவின் பிளாட் எண்.6, தெற்கு: சைமாபீ சைபாவின் சொத்து	16.11.2024	14.02.2025	ரூ.36,57,017.18
மனோகரன் ஆனந்தன் கலா மனோகரன் 20009420000817	சர்வே நம்பர். 404/10, ஃபைனல் பிளாட் நம்பர் 404/10,1/72 அக்கியம்பட்டி, பழையபாளையம், மருகாபுரி தாலுகா, மணப்பாறை; திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு. மற்றும் இதன் எல்லைகள்: வடக்கு: கிழக்கு மேற்கு சாலை, கிழக்கு: சண்முகன் சொத்து, மேற்கு: காலியாக உள்ள சொத்து, தெற்கு: சின்னக்கண்ணு சொத்து	16.11.2024	12.02.2025	ரூ.33,97,848.35

இடம்: வேலூர்
தேதி : 19/02/2025
பந்தன் பேங்க் லிமிடெட் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி